# பெலாரஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. HE. செர்ஜி அலினிக் அவர்களின் இந்திய வருகை (மார்ச் 12-13, 2024)

மார்ச் 14, 2024

பெலாரஸ் குடியரசின் வெளியுறவுத்துறை அமைச்சர், திரு. HE. செர்ஜி அலினிக் அவர்கள், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கர் அவர்களின் அழைப்பின் பேரில் 2024 மார்ச் 12 மற்றும் 13 ஆகிய தேதிகளில் இந்தியாவிற்கு அதிகாரப்பூர்வ பயணம் மேற்கொண்டார்.

பெலாரஷ்ய வெளியுறவு அமைச்சர் இந்த பயணத்தின் போது இந்திய வெளியுறவு அமைச்சர் (EAM) டாக்டர். எஸ். ஜெய்சங்கர், வர்த்தகம் மற்றும் கைத்தொழில், நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகம், ஜவுளித் துறை அமைச்சர், திரு. பியூஷ் கோயல் (CIM) மற்றும் இரசாயனங்கள் மற்றும் உரங்கள், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர். மன்சுக் மாண்டவியா ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினார். மேலும் அவர் இந்திய வர்த்தக சமூகத்தினருடன் கலந்துரையாடியதோடு, நிதி அமைச்சகத்தின் நிதிச் சேவைகள் செயலாளர் டாக்டர். விவேக் ஜோஷி அவர்களையும் சந்தித்தார்.

2024 மார்ச் 12 அன்று EAM உடனான சந்திப்பில், இரு அமைச்சர்களும் இந்தியா-பெலாரஸ் மாநில இருதரப்பு உறவுகளை மதிப்பாய்வு செய்து, வர்த்தகம், பொருளாதாரம், காப்பீடு, பாதுகாப்பு, கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் போன்ற துறைகளில் வளர்ச்சி கூட்டாண்மை மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து விவாதித்தனர். மேலும் ஐக்கிய நாடுகள் சபை(UN), SCO போன்ற பல்வேறு பன்முகக் குழுக்கள்/நிறுவனங்களில் பரஸ்பர நலன் மற்றும் ஒத்துழைப்பு தொடர்பான பிராந்திய/உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் அவர்கள் விவாதித்தனர்.

2024 மார்ச் 12 அன்று சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை, இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியாவுடன் பெலாரஷ்ய வெளியுறவு அமைச்சரின் சந்திப்பு, சுகாதாரம், மருந்துகள் மற்றும் உரங்கள் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் உள்ள வழிகளில் கவனம் செலுத்தியது. CIM திரு. பியூஷ் கோயல் உடனான

சந்திப்பின் போது, இருதரப்பு பொருளாதார கூட்டுறவின் பல்வேறு அம்சங்களைப் பற்றி அதாவது மின்சார வாகனங்கள், விவசாய இயந்திரங்கள் மற்றும் அறுவடை கருவிகள் தயாரிப்பில் ஒத்துழைப்பதன் மூலம் இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான வழிகள் உட்பட இரு தரப்பும் விவாதித்தனர். இரு நாடுகளின் வர்த்தக சமூகங்களிடையே கிடைக்கக்கூடிய வணிக வாய்ப்புகள் குறித்து அதிக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை இரு அமைச்சர்களும் வலியுறுத்தினர் .

2024 மார்ச் 12 அன்று FICCI ஆல் ஏற்பாடு செய்த கலந்துரையாடலின் மூலம் பெலாரஷ்ய பிரதிநிதிகள் குழுவினர், இந்திய வணிகம் மற்றும் தொழில்துறையினருடன் கலந்துரையாடினர்.

இந்தியாவும் பெலாரஸும் பல்வேறு துறைகளில் விரிவான உறவுகளை கொண்டுள்ளனர். அவர்களின் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், இருதரப்பு, பிராந்திய மற்றும் பலதரப்பு விவகாரங்களில் பரஸ்பர நலன் சார்ந்த கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், வெளியுறவுத்துறை ஆலோசனைகள், அரசாங்கங்களுக்கு இடையேயான ஆணையம் (IGC) மற்றும் கூட்டுப் பணிக்குழுக்கள் மூலம் அவர்கள் வழிமுறைகளை ஏற்படுத்தியுள்ளனர். மேலும் வர்த்தகம், பொருளாதாரம், தொழில், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கலாச்சாரம் தொடர்பான இந்தியா-பெலாரஸ் கூட்டு ஆணையத்தின் (IGC-TEC) 11வது கூட்டத்தில் பங்கேற்பதற்காக பெலாரஸின் வெளியுறவு அமைச்சர் மறைந்த திரு. விளாடிமிர் மேக்கியின் கடைசி வருகை நவம்பர் 2022 இல் நடைபெற்றது. இதில் EAM, CIM மற்றும் இரசாயனங்கள் மற்றும் உரங்களுக்கான அமைச்சருடன் இருதரப்பு சந்திப்புகளும் நடைபெற்றன.

**புது தில்லி**
**மார்ச் 14, 2024**